**தலைப்பு 009 – நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 009- நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நியாயசபைக்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதிக்கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நியாயசபையால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நியாயசபையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நியாயசபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியாயசபையின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 71,960 ஆன கட்டுநிதி மீதி திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதியொன்று காணப்படாதிருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 3 படிவத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் புத்தகங்களின் பிரகாரம் கட்டுநிதி மீதியாக ரூபா 71,960 காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரியாக பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுநிதி தீர்த்தல் ஏசீஏ-3 வடிவத்தில் சரியாக பதியப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்காமையின் காரணமாக 04 மீண்டெழும் செலவின விடயங்களில் 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | மீண்டெழும் செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும் கடந்த ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையையில் நிறுவனம் மூடிப்பட்டமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் மட்டுப்படுத்தப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமையால் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது செலவின விடயம் 1003-ஏனைய படிகளுக்காக நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய தலைப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,000 செலவினம் நியாயசபையால் மேற்கொள்ளப்பட்ட செலவினமாக கருதி ஏசீஏ-02(ii) படிவத்தில் காசேட்டின் பிரகாரம் செலவினத்தில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போதும் சரியாக பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் செலவிடப்பட்ட செலவினங்கள் ஏசீஏ-2(ii) படிவத்தில் தனியாக பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு. | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான இறுதி அறிக்கை கிடைத்ததன் பின்னர் செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையின் வரைவொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய இலக்கம் 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை. | ஒவ்வொரு நிதியாண்டிலும் பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் பொது 47 அறிக்கையின் பிரகாரம் அழிவடையச் செய்ய வேண்டிய பொருட்கள், பழுதுபார்க்க வேண்டிய பொருட்கள், விற்பனை செய்ய வேண்டிய பொருட்கள் மற்றும் ஏனைய அரசாங்கத்தின் நிறுவனத்திற்கு கைளிக்க வேண்டிய பொருட்கள் தொடர்பாக பொருத்தமான | கடந்த ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வின் போது பொருத்தமற்றதாக வெளியிடப்பட்ட பொருட்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் தாமதமாக இருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் போது பொது 47 அறிக்கையின் படி செயற்படுவதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் பொது 47 அறிக்கையின் படி நடவடிக்கை எடுத்து பொருள் மெய்மெய்யாய் வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுத்து அடுத்து வரும் ஆண்டின் மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பொது 47 அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2020/02 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி. | நியாயசபையால் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் ரூபா 200,000 தொகை ஒதுக்கப்பட்ட ஒரே ஒரு மூலதன செலவினம் தொலைபேசி முறைமையை நவீன மயப்படுத்துவதற்காக இருந்ததுடன் காகிதாகிகள் சிறு அளவில் அரசாங்க கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதனால் பெறுகைத் திட்டமொன்று தயாரித்தல் நடைமுறை சாத்தியமற்று இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை. | நியாயசபையினால் மீளாய்வாண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணியினர் 18 ஆக இருந்ததுடன், அதில் 07 பேர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுபவர்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆகும். அதன் படி ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தும் இயலுமை காணப்படாதிருந்ததுடன் , அதற்காக திறைசேரியில் இருந்து நிதிஏற்பாடு வழங்குதலும் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் மனித வள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரித்தல் நடைமுறை ரீதியில் சாத்தியமற்றிருந்தது. | |
| (உ) | 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 02/2021(vii) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | கைவிரல் அடையாள இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச் செல்கைகள் குறிப்பிடுவதற்கு பதிலாக வருகை, வெளிச்செல்கை பதிவேடு ஒன்று பராமரித்தல் 2021 ஒக்டோபர் 02 ஆம் திகதி முதல் 2022 சனவரி 02 ஆம் திகதி வரை மாத்திரம் இருக்க வேண்டியமை அறிவிக்கப்பட்ட போதிலும், நியாயசபை 2022 சனவரி 02 முதல் கணக்காய்வு திகதியான 2023 பெப்ரவரி 06 வரையிலும் கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவற்கு பதிலாக வருகை, வெளிச்செல்கை பதிவேட்டை பேணியிருந்தது. | கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே கைவிரல் அடையாள இயந்திரத்தின் பயன்பாடு நிறுத்தப்பட்டு வருகை பதிவேட்டில் கையொப்பமிடுதல் போதியளவாக இருந்ததாக அரச நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை 02/2021(iv) இன் மூலம் அறிவிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை, வெளிச் செல்கைகளை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) பிரிவு. | மீளாய்வாண்டின் போது ரூபா 199,750 செலவில் மேற்கொள்ளப்பட்ட அலுவலக உள்ளக தொலைபேசி முறைமையை நவீனமயப்படுத்தும் பெறுகை பணிகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | 03 நிறுவனங்களில் இருந்து வரையறுத்த கூறுவிலைகள் கோரி ஆகக் குறைந்த விலையான ரூபா 199,750 இற்கு இந்த பணிகள் நிறைவேற்றப்பட்டி ருந்தது. அதற்காக தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர் நியாயசபையில் இருக்காமை, வெளி வாரி நிறுவனங்களின் சேவை பெறுவதாயின் கொடுப்பனவு செய்வதற்கு பணம் காணப்படாமையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவி ல்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியாயசபையால் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டம் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2020/02 என்ற அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்காமை. | 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் குறித்துரைத்த படிவத்தின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2002 இன் 04 ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் நியாயசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைபாடுகள் அந்த முறைப்பாடுகள் கிடைத்து 02 மாதத்திற்குள் விசாரணை செய்து இறுதியாக பொருத்தமானதை செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும் நியாயசபைக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கு குறைந்த தீர்த்து வைப்பதற்கு காணப்பட்ட 412 முறைப்பாடுகளும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த தீர்த்து வைப்பதற்கு காணப்படுகின்ற 354 முறைப்பாடுகளும் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட தீர்த்து வைப்பதற்கு காணப்படுகின்ற 47 முறைப்பாடுகளும் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் எழுந்திருந்த போராட்ட கலவர நிலைமையின் அடிப்படையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, எரிபொருள் நெருக்கடிகளுக்கு இடையே பிரயாணம் செய்தல் வரையறுக்கப்பட்டமை போன்றவையின் காரணமாக முறைப்பாடுகளை அழைத்தல் வரையறுக்க வேண்டியிருந்ததுடன், முறைப்பாடுகளுக்கு இடையே 208 முறைப்பாடுகளை தீர்த்து வைக்க முடியுமாக இருந்தது. நியாயசபை ஸ்தாபிப்பதற்கு உரிய சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் முறைப்பாடொன்று கிடைத்த திகதியில் இருந்து 02 மாதங்களுக்குள் விசாரணை செய்து இறுதியாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், சட்டமா அதிபரினால் அது தொடர்பாக ''சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்ட போதிலும், அவ்வாறான ஏற்பாடுகள் கட்டாயமற்றவை மற்றும் ஆலோசனை ரீதியிலானது'' என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் நியாயசபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதாவது முறைப்பாடுகள் கிடைத்த திகதியில் இருந்து 02 மாதங்களுக்குள் விசாரணை செய்து ஏதாவது பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு இல்லையாயின் சட்டத்தின் அந்த பிரிவுகளை திருத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 ஆம் ஆண்டில் நியாயசபைக்கு கிடைத்த 252 முறைப்பாடுகளில் 06 முறைபாடுகள் மாத்திரமே தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. அது கிடைத்த முறைப்பாடுகளில் 2.38 சதவீதம் ஆகும். | முறையீட்டாளர், முறையீட்டாளரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அல்லது சட்ட உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளின் தாமதம், அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் முறையீடுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையினால் நாட்கள் வழங்கும் போது நீண்ட காலம் எடுத்தமைக்கு நாட்டில் காணப்படுகின்ற சமூக மற்றும் அரசியல் நிலைமைகளினால் தீர்வு வழங்கலில் தாமதம் ஏற்படுகின்றமையை தவிர்க்க முடியாதிருந்தது என தெரிவித்துக் கொள்கின்றோம். | முறைப்பாடுகளை தீர்ப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு தாக்கமளித்த காரணங்களை இனங்கண்டு அதற்கு தீர்வினை தயாரித்து தாமதத்தினை குறைத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் பொது மக்களின் தேவை மற்றும் நிறுவனம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அல்லது பாராட்டுக்களை வெளியிடுவதற்கு உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றின் மூலம் வசதிகள் வழங்க வேண்டியிருந்த போதும் நியாயசபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது மக்களுக்கு தகவல்களை அறிந்து கொள்வதற்கு முடியுமான வகையில் இணையதளமொன்றை தயாரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பொது மக்களின் தேவை மற்றும் நிறுவனம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அல்லது பாராட்டுக்களை வெளியிடுவதற்கு உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றின் மூலம் வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நியாயசபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 31 ஆக இருந்த போதும் உள்ளபடியான பதவியணியினர் 19 ஆனமையால் பதவியணியினரில் 12 வெற்றிடங்கள் காணப்பட்டன. 07 பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதில் சிரேஷ்ட நிலை பதவியான செயலாளர் பதவி மற்றும் உதவி செயலாளர் பதவிகள் 2017 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரித்துக் கொள்ளும்வரை வெற்றிடங்களுக்காக சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | தேவையான அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியாயசபை ஸ்தாபிக்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒவ்வொரு பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஆட்சேர்த்தல் நடைமுறை வரைவு தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்து தேவையான பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் வேண்டும். |